# செய்திவெளியீடு

செ.வெ.எண். 354 நாள் : 01.11.2025

**மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், துறைமுகம் சட்டமன்ற தொகுதி, இராயபுரம் மண்டலத்திற்குட்பட்ட பகுதிகளில் ரூபாய் 4.49 கோடி மதிப்பீட்டிலான புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டிப் பணிகளைத், தொடங்கி வைத்தார்.**

******

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் நல்வழிகாட்டுதலின்படி, இன்று (01.11.2025) மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சரும், சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவருமான திரு.பி.கே.சேகர்பாபு அவர்கள், துறைமுகம் சட்டமன்றத் தொகுதி, இராயபுரம் மண்டலத்தில் துறைமுகம் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ் மற்றும் பெருநகர சென்னை மாநகராட்சியின் மூலதன நிதியின் கீழ், பல்வேறு புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டிப் பணிகளைத் தொடங்கி வைத்தார்.

மாண்புமிகு இந்து சமய அறநிலையத்துறை அமைச்சர் மற்றும் சென்னைப் பெருநகர் வளர்ச்சிக் குழுமத் தலைவர் அவர்கள், துறைமுகம் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட, இராயபுரம் மண்டலத்தில், துறைமுகம் சட்டமன்ற உறுப்பினர் மேம்பாட்டு நிதியின் கீழ், வார்டு-59ல், டி.என்.பி.எஸ்.சி சாலையில் ரூபாய் 60 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பல்நோக்கு மையம் கட்டத்தி கான கட்டுமானப் பணி, வார்டு-57ல், வ.உ.சி. சாலையில் ரூபாய் 75 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பல்நோக்கு மையம் கட்டடத்திற்கான கட்டுமானப் பணி மற்றும் வார்டு-54ல், வால்டாக்ஸ் சாலை, திருப்பள்ளி தெரு எதிரில் ரூபாய் 65 இலட்சம் மதிப்பீட்டில் புதிய நியாய விலைக்கடை கட்டடத்திற்கான கட்டுமானப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டிப் பணிகளைத் தொடங்கி வைத்தார்.

இதனைத் தொடர்ந்து, பெருநகர சென்னை மாநகராட்சி மூலதன நிதியின் கீழ் வார்டு- 59 ஐசக் தெருவில் ரூபாய் 79 இலட்சம் மதிப்பீட்டில் புதிய பல்நோக்கு மையம் மற்றும் வார்டு-55, போர்ச்சுகீஸ் சர்ச் தெருவில் ரூபாய் 170 இலட்சம் மதிப்பீட்டில் சென்னை நடுநிலைப்பள்ளியில் பழுதடைந்த கட்டிடத்தை மட்டும் இடித்து, தரைத்தளத்தில் புதியதாக 5 எண்ணிக்கையிலான வகுப்பறைகள் மற்றும் சமையல் கூடத்துடன் கூடிய புதிய கட்டிடம் அமைக்கும் பணிகள் என மொத்தம் ரூபாய் 4.49 கோடி மதிப்பீட்டிலான 5 புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டிப் பணிகளைத் தொடங்கி வைத்தார். இப்பணிகளை உரிய தொழில்நுட்ப வழிகாட்டுதலுடன் மேற்கொள்ளவும் விரைவாக முடித்து பயன்பாட்டிற்குக் கொண்டுவர அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

மேலும், மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அப்பகுதியில் உள்ள பொதுமக்களுடன் கலந்துரையாடி தேவைகள் மற்றும் குறைகளைக் கேட்டறிந்து அதன் மீது உரிய நடவடிக்கைகள் மேற்கொள்ள அலுவலர்களுக்கு உத்தரவிட்டார்.

இந்நிகழ்வுகளின்போது, மாண்புமிகு மேயர் திருமதி ஆர்.பிரியா, வடக்கு வட்டார துணை ஆணையர் திரு. கட்டா ரவி தேஜா, இ.ஆ.ப., மண்டலக் குழுத் தலைவர் திரு. பி.ஸ்ரீராமுலு, தமிழ்நாடு

நுகர்பொருள் வாணிப கழக முதுநிலை மண்டல மேலாளர் (வடக்கு) திருமதி.விமலா ராணி, உணவுப் பொருள் வழங்கல் துறை உதவி ஆணையாளர் திருமதி கற்பகவள்ளி, உதவி கல்வி அலுவலர்கள் திரு.தணிகைவேலு, திருமதி வேதவல்லி, மாமன்ற உறுப்பினர்கள் திரு.ல. நவீன், திரு. வெ. பரிமளம், திரு. ராஜேஷ் ஜெயின், மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**

**பெருநகர சென்னை மாநகராட்சி.**